


# 2010 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்
# ஒன்ராறியோவை வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் திறந்து விடுகின்றது

***மக்கின்ரி அரசாங்கத்தின் சமநிலைப்படுத்தப்பட்ட திட்டம் அரச சேவைகளைப் பாதுகாத்து, பற்றாக்குறையை அகற்றும் வழிமுறைகளை வரையறுக்கின்றது***

**செய்தி** மார்ச் 25, 2010

2010 வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக, மக்கின்ரி அசாங்கம் பூகோளப் பொருளாதார மந்தத்தினால் விளைவிக்கப்பட்ட பற்றாக்குறையை அகற்றும் வழிமுறைகளை வரையறை செய்யும் அதேவேளை, புதிய வேலைவாய்ப்புக்கும் வளர்ச்சிக்குமான Open Ontarioவை உள்ளடக்கும் தனது ஐந்து வருடத் திட்டத்துடன் முன்நோக்கி நகர்கின்றது.

இந்த வரவுசெலவுத் திட்டமானது ஒன்ராறியோவின் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தில் அறிவிக்கப்பட்ட முன்னெடுப்புகளை விரிவுபடுத்தி, இந்த செப்டம்பரில் 20,000 மேலதிக மாணவர்கள் கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் செல்ல உதவக்கூடியதும், வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வடபகுதி ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடியதுமான முதலீடுகளைப் பிரேரிக்கின்றது.

பெறுமதியானவை என ஒன்ராறியோவாசிகள் கருதும் கல்வி, சுகாதார பராமரிப்பு, வினைத்திறன் பயிற்சி என்பன உட்பட, வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும், செயல் திட்டங்களை, சேவைகளை மேம்படுத்துவதற்கும் என, கடந்த ஆறு வருடங்களில் அடைந்த முன்னேற்றத்தினை, Open Ontario மேலும் கட்டி எழுப்புகின்றது.

இழப்பீடு அளித்தலைக் கட்டுப்படுத்தல், அரச செயல் திட்டங்களை மேலும் சாதுரியமாக்குதல் என்பன உட்பட, செலவினங்களை நிர்வகிப்பதற்கான வழிமுறைகளை 2010 வரவுசெலவுத் திட்டம் உள்ளடக்குகின்றது. 5 வருடங்களில் பற்றாக் குறையைப் பாதியாகக் குறைத்து, அதனை எட்டு வருடங்களில் அகற்றுவதற்கென, யதார்த்தமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான ஒரு திட்டத்தை இந்த 2010 வரவு செலவுத் திட்டம் வகுக்கின்றது.

**கூற்றுக்கள்**

"ஒன்ராறியோவின் வியாபாரங்கள் மற்றும் வர்த்தகங்கள் மீதான பூகோளப் பொருளாதார மந்தப் பாதிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எமது அரசாங்கம் மேற்கொண்டது. ஒன்றிணைந்து செயலாற்றி, நாம் தொடர்ந்து குறுகிய காலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கி, நீண்ட கால வளர்ச்சிக்கான அத்திவாரத்தை இடுவோம்."
- டுவைற் டங்கன், நிதி அமைச்சர்

"பாடசாலைகளிலும் "மருத்துவ மனைகளிலும் ஏனைய அரச சேவைகளிலும் ஒன்ராறியோவாசிகள் அடைந்த முன்னேற்றத்தை, தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்ள உதவுவதில், வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெறும் எங்களுகு ஒரு பங்கு உண்டு."
- டுவைற் டங்கன், நிதி அமைச்சர்

…/2

## உடனடி உண்மைகள்

### பல்கலைக் கழக மற்றும் கல்லூரிக் கல்வி

- இந்த செப்டெம்பரில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் புதிய மாணவர் எண்ணிக்கைளை அதிகரிப்பதற்கென 310 மில்லியன் டொலரை முதலிடுதல். 2009-10இல் மொத்தமாக 155 மில்லியன் டொலர் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆட்சேர்ப்பு வளர்ச்சிக்கு வழங்கப்பட்டது. இத்தொகையில் 65 மில்லியன் டொலர் *2009 இலையுதிர்கால Ontario Economic Outlook and Fiscal Review* ஊடாக அறிவிக்கப்பட்டது.
- உலகின் மிகச் சிறந்த மாணவர்கள் இங்கே கல்விகற்று, குடியமர்ந்து, ஒன்ராறியோ ஒரு வலுவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதை ஊக்குவிப்பதற்கென, வெளிநாடுகளில் ஒன்ராறியோ பல்கலைக்கழக மற்றும் கல்லூரிக் கல்வியைத் தீவிரமாக ஊக்குவித்தல்
- credit transfer system ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான மேலதிக மூலவளங்களை வழங்குவதன் மூலம், ஒன்ராறியோவின் பல்கலைக்கழக மற்றும் கல்லூரிக் கல்வியூடாக, மாணவர்கள் நகர்ந்து செல்லும் ஆற்றலை முன்னேற்றுதல்.

### ஒன்ராறியோவின் வடபகுதியில் வேலை வாய்ப்புக்களும் வளர்ச்சியும்

- பாரிய கைத்தொழில் நிறுனங்கள் தமது மின்சார விலைகளை சராசரி 25 சதவீதத்தால் குறைக்கத் தகுதி பெறும் வகையில், வருடாந்தம் சுமார் 150 மில்லியன் கொண்ட ஒரு மூன்று வருட வடபகுதி கைத்தொழில் மின்சாரத் திட்டம்
- பூர்வீக வாசிகள் மற்றும் வடபகுதி ஒன்ராறியோவாசிகள் பங்குபற்றிப் பயன்பெற உதவும் வகையிலான, வளர்ந்துவரும் பொரளாதார வாய்ப்புக்களைக் கொண்ட, புதிய திட்ட அடிப்படையிலான வினைத்திறன் பயிற்சித் திட்டத்திற்கென, மூன்று வருடங்களுக்கு 45 மில்லியன் டொலர்.
- Ring of Fire பகுதியில் பொருளாதார உத்தரவாதங்களை முன்னெடுப்பதற்கான கூட்டு முயற்சிக்குத் தலைமைதாங்கவென ஒரு பதிய Ring of Fire ஒருங்கிணப்பாளர்
- உயர்ந்த மின்சாரக் கட்டணத்தினைக் குறைப்பதற்கு, நடுத்தர வரையிலான வருமானங்கொண்ட, தகுதிவாய்ந்த வடபகுதிக் குடியிருப்பாளர்களுக்கெனப் பிரேரிக்கப்பட்ட ஒரு நிரந்தர வடபிரதேச ஒன்ராறியோ மின்சாரக் கட்டண மீள்கொடுப்பனவு.

### முழுநாள் கல்வி

- கிட்டத்தட்ட 600 பாடசாலைகளில் உள்ள 35,000 சிறுவர்களுக்குப் பயன் தரவல்ல, நாலு மற்றும் ஐந்து வயதினருக்கான முழுநாள் கல்வியை, செப்டெம்பர் 2010 தொடக்கம் நடைமுறைப்படுத்தல்
  - செப்டெம்பர் 2010ல் அறிமுகமாகும் இத்திட்டம், முழுநாள் கல்வியை 2015-16இல் பூரணமாக நடைமுறைப்படுத்தும்.
  - முழுநாள் கல்வி பூரணமாக அமுல் படுத்தப்படும்போது, மேலதிகமாக 3,800 ஆசிரியர்களுக்கும் 20,000 முன்னிலைப் பிள்ளைப்பருவக் கல்வி புகட்டுநருக்கும் வேலை வழங்குவதுடன், சுமார் 247,000 சிறுவர்களுக்கும் அது பயன் தரும்.

### சிறுவர் பராமரிப்பு முதலீடு

- மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட இடைவெளியை நிரப்பும் வகையில், 8,500 சிறுவர்களுக்கான இடங்களை மேலும் பாதுகாக்கவென்று வருடாந்தம் 63.5 மில்லியன் டொலர் முதலிடுதல்
  - வேலையிலிருக்கும் பெற்றார் தொடர்ந்தும் சிறந்த சிறுவர் பராமரிப்பைப் பெறுவதற்கும், தொழில் அணியில் அவர்கள் துரிதமான பங்கினை வகிப்பதற்கும் இந்த முன்னெடுப்பு உதவும்.

### தூண்டுதல் உட்கட்டமைப்பு முதலீட்டைப் பூர்த்தி செய்தல்

- 2009-10 மற்றும் 2010-11 காலப் பகுதிகளின் முன்னெப்போதும் இல்லாதளவிலான உட்கட்டமைப்பு முதலீடுகள் 300,000க்கும் மேலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிப் பாதுகாப்பதற்கு உதவுகின்றன.
- Conference Board of Canadaவின் அபிப்பிராயத்தின்படி, ஓரளவு பூகோளப் பொருளாதார மந்தத்தை எதிர்க்கும் புதிய தூண்டுதல் வழிமுறைகளின் காரணமாக, உட்கட்டமைப்புக்குரிய மேலதிக ஊக்குவிப்பானது, ஒன்ராறியோவின் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) 2009இல் அநேகமாக ஒரு சதவீத புள்ளியால் உயர்த்த உதவியது. 2010இல் இது மேலும் 0.4 சதவீத புள்ளிகளைக் கூட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பொறுப்புடன் நிர்வகித்தல்**

- ஐந்து வருடங்களில் பற்றாக் குறையைப் பாதியாகக் குறைத்து, எட்டு வருடங்களில் அதனை அகற்றுவதற்கான யதார்த்தமானதும் பொறுப்பு மிக்கதுமான ஒரு திட்டத்தை வழங்குதல்
- 2009-10 காலப் பகுதிக்கான பற்றாக்குறையை 21.3 பில்லியன் டொலராக எதிர்வு கூறுதல். இது *2009 இலையுதிர்கால Ontario*
- *Economic Outlook and Fiscal Review* ல் வெளியிடப்பட்ட 24.7 பில்லியன் டொலரில் இருந்து 3.4 பில்லியன் டொலர் குறைந்த எதிர்வுகூறலாகும்.
- சட்டங்களை அறிமுகம் செய்வதன் மூலம் அரச சேவைகளைப் பாதுகாத்து, சேவை வழங்கலை நிலைநிறுத்த உதவும் வகையில், அரிதாகக் கிடைக்கும் மூலவளங்களை வழிப்படுத்தல், பின்வருவனவற்றை நிகழ்த்தும்:
  - மாகாண சட்டசபை உறுப்பினருக்கான தற்போதய ஒரு வருட சம்பள உறைவை மூன்று வருடங்களுக்கு நீடிக்கின்றது
  - தொழிற் சங்கமற்ற அரசியல் மற்றும் சட்டசபை அலுவலர்களது சம்பளம் சக நலன்கொடுப்பனவுகளை இரண்டு வருடங்களுக்கு உறைய விடுதல்
  - Broader Public Sector மற்றும் Ontario Public Service என்பவற்றில் உள்ள தொழிற் சங்கமற்ற வேலையாளர்களது சம்பளம் சக நலன்கொடுப்பனவுகளை இரண்டு வருடங்களுக்கு உறைய விடுதல்
  - இந்த நடவடிக்கைகள் 750 மில்லியன் டொலர் வரையிலான பணத்தை பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் அரச சேவைகளுக்கு மீள்வழிப்படுத்த உதவும்
- குறிப்பிட்ட ஒரு காலப்பகுதி வரை, உள்ளக அனுமதிச் செலவுகளை 2010-11 மட்டத்தில் அல்லது அதன் கீழ் உறைய விடுதல்
- ஒன்ராறியோ அரசின் செயல் திட்டங்கள் மற்றும் சேவைகள் மீதான ஒரு விரிவான மீழ்நோக்கினைத் தொடர்தல்
- generic மருந்துகளின் விலைகளைக் குறைக்க உதவும் வகையில் ஒன்ராறியோவின் மருந்து தொகுதியை சீர்திருத்துவதற்கான பிரேரணைகள் உட்பட, சுகாதாரப் பராமரிப்பு செலவினங்களின் வளர்ச்சியைப் பொறுப்பு வாய்ந்த ஒரு வீதத்தில் நிர்வகித்தல்
- தூண்டுதல் நிதியளிப்பு முடிவடைந்ததும், அரசின் மூலதன செயல் திட்டங்களின் திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் வேகத்தைத் தாமதப்படுத்தல்
- சேவைபெறுநர் சேவைகளை முன்னேற்றி, வினைத்திறனை மேம்படுத்துவதற்கு, அரச செயல் திட்ட வழங்கலை சீர்திருத்துதல்
- 2010-12க்கு மேல், செயல் திட்ட செலவுகளின் வருடாந்த வளர்ச்சியை, சராசரி 1.9 சதவீதத்தில் நிறுத்தி வைத்தல்

**மேலும் அறிந்துகொள்க**

2010 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டத்தின் பின்புலத் தகவல்களை வாசியுங்கள்:
- ஒன்ராறியோவின் பொருளாதார தோற்றப்பாடு மற்றும் அரசிறைத் திட்டம்
- புதிய முதலீடுகள் ஊடாக பல்கலைக் கழக மற்றும் கல்லூரி கல்வியிலும் வடபகுதி ஒன்ராறியோவிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- பொறுப்புடன் நிர்வகித்தல்
- வேலைவாய்ப்புகளுக்கும் வளர்ச்சிக்குமான ஒன்ராறியோவின் வரித்திட்டம்

மக்கின்ரி அரசின் முதலீடுகள் பற்றிய மேலதிக தகவல்களை கல்வி, சுகாதாரம் மற்றும் துறைகள் என்பவற்றில் வாசித்தறியுங்கள்.

வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை வாசியுங்கள்.

அரசின் Open Ontario திட்டம் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.



**ஊடக விசாரணைகளுக்கு மட்டும்:**
Alicia Johnston, அமைச்சர் அலுவலகம், 416-325-3645
Scott Blodgett, நிதி அமைச்சு, 416-325-0324

**ontario.ca/finance-news**

**Tamil**

**பொது விசாரணைகளுக்கு அழையுங்கள்: 1-800-337-7222**
(ஒன்ராறியோவில் மட்டும், கட்டணமற்ற தொலைபேசி)